# 15

# திருப்பணி



# CHRISTIAN MINISTRY

# 15

## எப்படித் திருப்பணி செய்யக்கூடாது?

HOW NOT TO MINISTER

**1**

தனிப்பட்ட ஈடுபாட்டிற்கு எதையும் பதிலாக்கக்கூடாது.

**2**

வாழ்வில் பரிசுத்தத்தை அசட்டை செய்யக்கூடாது.

**3**

குடும்பப் பொறுப்புகளில் தவறக்கூடாது.

**4**

தனித்தே செயல்படுபவராய் இருக்கக்கூடாது.

**5**

மற்ற ஊழியங்களைக் காப்பியடிக்கக்கூடாது.

**6**

பிரபலமாகுதலை நாடக்கூடாது.

**7**

அருட்செய்தியைக் கலப்படமாக்கக்கூடாது.

**8**

எளியவரைக் கண்டும் காணாமலும் இருக்கக்கூடாது.

**9**

பணம் பணம் என்று அலையக்கூடாது.

**10**

திருமறையின் கோட்பாடுகளை மீறக்கூடாது.

# 15 எப்படித் திருப்பணி செய்யக்கூடாது?

## அறிமுகவுரை

■ சபைச் சரித்திரத்தில் என்றுமில்லாத அளவு
இன்று ஊழியர், பிரசங்கிமார் பெருக்கம்;
சாதனையோ பிரமாதமில்லை.

(உ-ம்) வெறும் 120 சீடர் உலகை அசைத்தனர்;
இன்று 120 சபைகள்கூட ஒரு நகரில் தாக்கம்
ஏற்படுத்துவதில்லை.
ஆதிச்சீடரிடமில்லாத அச்சகங்கள், ஒலிபெருக்கிகள்,
மின்னணு சாதனங்கள், இன்னும் எத்தனையோ வசதிகள்
நம்மிடமிருந்தும் ...

காரணம்: நாம் பைபிள் முறைகளை மறந்துவிட்டோம்.

■ திருமறையின் பயன்கள் எண்ணிலடங்கா.
அவற்றில் முக்கியமானதொன்று
அறிவீனத்திற்கும் வஞ்சகத்திற்கும் நம்மை எச்சரித்தல் —

சங் 19:7-11...*அவைகளால் உமது* ***ஊழியன்*** *எச்சரிக்கப்படுகிறான்*
ஆம், குறிப்பாக இறைப்பணியாளர்க்கு!

சொந்த ரசனை மற்றும் பிரசங்கத்திற்காக மட்டுமே
பைபிளை ஊழியர் பயன்படுத்தக்கூடாது —
வச 10 ... *பொன் ... தேன் ...*

■ இறைப்பணியில் அதிமுக்கிய தெரிந்தெடுப்பு —
மக்களின் பாராட்டா, கடவுளின் அங்கீகாரமா?
கலா 1:10 ... *நான் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்தினால்*
*கடவுளது ஊழியன் அல்லவே*

இறைப்பணியைக் குறித்த ஓர் அழகிய சித்திரம் —

1 கொரி 3:9 ... *''கடவுளின்'' உடன் பணியாளர் ...*

*பண்ணை ... மாளிகை ...*

என்னே மேன்மை! என்னே சிலாக்கியம்!

நமது ஊழியம் எதுவாயினும் இவையிரண்டுமுண்டு —

வச 6-9 ... *நடுவது ... நீர்ப்பாய்ச்சுவது ...*

ஒவ்வொரு பண்ணைக்கும் அதினதின் விதிமுறைகள் இருக்கும்; கடவுள் பண்ணையில் கடவுள் சட்டங்களையே பின்பற்றவேண்டும்.

- கிறிஸ்தவப் பணி: சிலாக்கியமும் பொறுப்பும்.
சிலாக்கியத்தில் களித்து, பொறுப்பில் கவலையீனமாயிருந்தால், நேர்மையிழந்து ஏனோதானோ என்றாகிவிடுவோம்.

இரண்டும் சமநிலைப்படுத்தப்படவேண்டும்.

- திருச்சபை சுறுசுறுப்பாயிருந்தால், பிசாசும் விறுவிறுப்பாயிருப்பான்.
திருப்பணியை அவனால் அழிக்கமுடியாவிடில், திருப்பணியாளரைக் கடவுளின் வழிகள், திட்டங்களிலிருந்து திசை திருப்பிக் களங்கப்படுத்த முயலுவான்.

*''ஒளியின் தூதனான''* அவன் தனது போலி ஊழியரை
*''நீதியின் ஊழியர்''* போலக் காட்சியளிக்கச் செய்வான்
(2 கொரி 11:14,15)

- இறைப்பணியை இறைப்பாணியில் செய்யவேண்டும்;
இறைப்பாணியானது இறைவார்த்தையில் வெளிப்பட்டுள்ளது.

பாவவுலகின் முறைகளும் தத்துவங்களும்
திரளாய்க் கிறிஸ்தவ ஊழியங்களில் புகுந்துவிட்டன.
அவற்றை வெளியேற்றவே இங்குள்ள பாடங்கள்.

- இப்பாடங்கள் முழுநேரப் பணியாளருக்கு மட்டுமல்ல, கடவுளை எந்த அளவிலாவது ''சேவிக்கவே'' அழைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் பொருந்தும்!

## எப்படித் திருப்பணி செய்யக்கூடாது?

### 1. தனிப்பட்ட ஈடுபாட்டிற்கு எதையும் பதிலாக்கக்கூடாது.
Do not substitute anything for personal work.

- பழைய ஏற்பாடு: இரு வகுப்பினர்: ஆசாரியர் vs. மக்கள்

  அடுத்த இருவகைத் தலைவர் —

  அ) தீர்க்கதரிசிகள் ... நீதிநெறியில் நடத்தும் தலைவர்கள்

  ஆ) இராஜாக்கள் ... அரசியல் தலைவர்கள்

  இந்த 3 குழுவினர் மட்டுமே ''அபிஷேகிக்கப்பட்டனர்''—

  புதிய ஏற்பாட்டிலோ,

  அனைத்து விசுவாசிகளுமே —

  ☐ தீர்க்கர்கள்: அப் 2:16-18 ... *''மானிடர் யாவர்மீதும்''*

  பாலின வேறுபாடில்லை: *குமாரரும் குமாரத்திகளும்*

  வயது வேறுபாடில்லை: *வாலிபரும் முதியோரும்*

  சமூக வேறுபாடில்லை: *வேலைக்காரரும் அடிமைகளும்*

  ☐ ஆசாரியரும் இராஜாக்களும்

  1 பேது 2:4,5 ... ஆராதிக்க ஆசாரியர் (Praise)

  :9 ... அறிவிக்க ஆசாரியரும் அரசரும் (Proclamation)

  **அனைத்து** விசுவாசிகளின் ஆசாரியத்துவம் (Priesthood).

  **அனைத்து** விசுவாசிகளின் தீர்க்கத்தரிசனத்துவம் (Prophethood).

  குருக்கள், மக்கள் என்றில்லை! (Clergy & Laity)

  குருக்கள் மட்டுமே; சாதா மக்களே கிடையாது!

  இச்சீர்திருத்தக்கால சத்தியம் ''எழுத்தளவில்தான்'' இருக்கிறது!

- கிறிஸ்துவின் உடலாம் சபையில் வரமில்லா அங்கமே இல்லை —

  *5 தாலந்துகள் ... 2 தாலந்துகள் ... 1 தாலந்து*

  ஒரு தாலந்து பெற்றோர்: அமைதிப் பெரும்பான்மையோர்

  : அரங்கத்திலிருக்கும் பார்வையாளர்

ஒரு தாலந்து பெற்றவன் அதைத் **தொலைத்து**விடவில்லை;
அவன் அதைப் **பயன்படுத்த**வில்லை!

*''பொல்லாதவனும் சோம்பேறியுமான ஊழியன்''* (மத் 25:26)

■ முக்கியமற்ற, பயனற்ற உறுப்பு எதுவும் உடலில் கிடையாது —

1 கொரி 12:27,18 ... *கடவுள் தமது* ***சித்தப்படி*** ...

''ஒரு குறிப்பிட்ட நோக்கம்''

''கவர்ச்சிகர வரமேதும் எனக்கில்லை'' என்று
எதற்கும் சாக்குப்போக்கு சொல்லாதீர்!

☐ கிதியோனுக்குக் கடவுளது பதில்: நியா 6:13,14 (பலம்)
*''உனக்கிருக்கும் இந்தப் பலத்துடன் போ ...''*

☐ மோசேக்குக் கடவுளது பதில்: யாத் 4:10,11,12 (பேச்சுத்திறன்)
*''மனிதனது வாயை உண்டாக்கியது யார்?''*

☐ எரேமியாவுக்குக் கடவுளது பதில்: எரே 1:6-8 (அனுபவம்)
*''நான் சிறுபிள்ளை என்று சொல்லாதே!''*

**உங்களது** சாக்குப்போக்கு என்னவோ?

■ தனியாள் ஆத்துமாதாயப் பணியில் துவங்குங்கள் —
முதலும் முடிவுமாய் இயேசு தனியாள் ஆத்துமாதாயகரே —

☐ நிக்கொதேமு (மார்க்கத் தலைவன்) யோ 3
☐ சகேயு (வரிக்காரன்) லூக் 19
☐ சமாரியப் பெண் (தள்ளப்பட்டவள்) யோ 4

இயல்பாய் உரையாடலைத் துவங்குங்கள் —
(உ-ம்) *''தாகத்துக்குத் தண்ணீர் கொடு!''* (யோ 4:8)
இயேசு அவளை இரட்சித்து, ஆத்துமாதாயகி ஆக்கினார்!

கைப்பறிப்புப் பழங்களே நேர்த்தியாம்!
தனியாள் ஆத்துமாதாயப்பணி மூலமே நான் இரட்சிப்படைந்தேன்.
கல்லூரியில் தனியாள் ஆத்துமாதாயகனாய் மாறினேன்.
*''சிறிய காரியங்களில்'' உண்மையாயிருந்தேன்!*

— *எளிய துவக்கங்களை* அசட்டைபண்ணாதிருங்கள் (சக 4:10)
— *துவக்கம் சிறியதாய் இருந்தாலும்* ... (யோபு 8:7)
— *"கடுகு விதை"* (மத் 13:31)

- சாதகமான சூழ்நிலைக்காய்க் காத்திருக்காதீர் —

  பிர 11:5,6 ... *காலையில் ... மாலையில் ...*

  (உ-ம்) சாது சுந்தர்சிங் — ரயிலில் கைப்பிரதி வினியோகம் அவர் வினியோகித்த கைப்பிரதியொன்றை உடன் பயணி வெளியே எறிந்தான்; பாலத்தின்கீழ் தற்கொலை செய்ய எண்ணி நின்ற ஒருவனை அது இரட்சித்தது!

- உங்களால் **முடிந்ததை** எல்லாம் செய்யுங்கள் —
  ... *தண்ணீர்கள்மேல் ... அநேக நாட்கள் ...* (பிர 11:1)

திரளாய் விதையுங்கள் (2 கொரி 9:6)
*சிறுக விதைப்பு ... சிறுக அறுப்பு ...*
*பெருக விதைப்பு ... பெருக அறுப்பு*
(உ-ம்) கைப்பிரதி வினியோகம்

- கிராமப்புற நற்செய்திப்பணி:
  இந்தியரில் 75 சதவீதத்திற்கும் மேல் கிராமங்களில்தான்.
  *பாடுங்கள் ... பறைசாற்றுங்கள் ...*

இறைப்பணியைத் **தாங்குவதோடு** திருப்தியடையாதீர்.
ஆளுக்கோர் ஆளைச் சந்திப்போம்! Each one, Reach one!

*"**நான்** சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் **எனக்கு** ஐயோ!"*

1 கொரி 9:16,17 ... விருப்பத்தைப் பொறுத்தல்ல, கட்டாயம்!

- ஓர் அறைகூவல் பாடல்:

  *"போ" அத்துடன் "அனுப்பு"*
  *இவ்வுலகின் எல்லையெங்கிலும்!*

  *உனக்கு முடிந்த இடங்களுக்குப் போகவேண்டுமே;*
  *உனக்கு முடியா இடங்களுக்கு அனுப்பவேண்டுமே.*

  *மவுனமாயிருந்தால் குற்றம் நம்மேல் சுமருமே;*
  *மவுனம் அகற்றி அறிவிக்க நாம் புறப்படுவோமே.*

## 2. வாழ்வில் பரிசுத்தத்தை அசட்டை செய்யக்கூடாது.

Do not neglect personal purity.

■ இறைமக்கள் யாவருமே திருப்பணியாளராய் அழைக்கப்பட்டுள்ளனர் ...

1 பேது 2:4,5

கிறிஸ்துவே *"ஜீவனுள்ள கல்லானவர்"* (வச 4)

கிறிஸ்தவரெல்லாரும் *"ஜீவனுள்ள கற்கள்"* (வச 5அ)

*"ஆன்மீக மாளிகையாய்க்"* கட்டப்பட்டுவருகிறோம் (திருச்சபை).

திருச்சபை **முழுவதும்** *"அரசகுல ஆசாரியக்கூட்டம்"* (வச 5,9).

இரு நோக்கங்களுக்காய் —

அ) ஆராதிக்க (வச 5) / புகழ்பாட ...

ஆ) அறிவிக்க (வச 9) / புகழ்பரப்ப ...

இதில் ஓங்கி நிற்கும் குணம் — "பரிசுத்தம்"

அ) *"பரிசுத்த" ஆசாரியக்கூட்டம்* (வச 5)

ஆ) *"பரிசுத்த" மக்களினம்* (வச 9)

ஏற்புடைய திருப்பணிக்கு ஒரே நிபந்தனை பரிசுத்தம் —

2 தீமோ 2:21 ... *தன்னைத் தூய்மைப்படுத்தினால்* ...

இச்சத்தியத்தின் அடிப்படையில்,

தீமோத்தேயுவுக்குப் பவுலின் நெருக்கமான அறிவுரை —

வச 22 ... *இச்சைகள் ... விலகியோடு ... சுத்த இதயம்*

■ தமது ஊழியர் எவரையும் பிரதானமாக இந்த ஆயத்தத்தின் வழியாகத்தான் கடவுள் எடுத்துச் சென்றார் —

☐ மோசே — *மிதியடிகள் ... உன்னை அனுப்புவேன்* (யாத் 3:4,5)

☐ ஏசாயா — *உதடுகள் ... யாரை அனுப்புவேன்?* (ஏசா 6:7,8)

மோசே — பாதங்கள் — அவருக்காய்ப் போக ...

ஏசாயா — உதடுகள் — அவருக்காய்ப் பேச ...

☐ எரேமியா (எரே 1:5) — *பிறக்குமுன்னரே பரிசுத்தம்பண்ணினேன்!*

இவர்களெல்லாம் தீர்க்கர்கள்: தேவனுக்காய்ப் பேசினர்.

அடுத்து, சில ஆசாரியரைப் பார்ப்போம் —

☐ ஆரோன் ... யாத் 28:2,3 ... *பரிசுத்த உடைகள்*

☐ யோசுவா ... சக 3:1-5 ... அ) *பட்டாடை* = வாழ்க்கை

ஆ) *தலைப்பாகை* = தலைமை

சாத்தான் எவ்வளவாய் எதிர்த்தான், பாருங்கள்!

''திருக்கரங்களில் ஒரு புனித ஊழியன் பயங்கர ஆயுதம்!''

"A holy minister is an awesome weapon in the hands of God!"

☐ பைபிளை எழுதக் கடவுள் பயன்படுத்திய அனைவரும் —

2 பேரு 1:21 ... *கடவுளின்* ***பரிசுத்த*** *மனிதர் பேசினர் ...*

■ காலப்போக்கில், இந்த மார்க்கத் தலைவரும் தொண்டரும் கடவுளது பரிசுத்தம் பற்றிய தரிசனம் இழந்தனர்—

எனவேதான் இயேசு அவர்களைக் கடிந்துகொண்டார் —

மத் 23:24-26 ... *வெளிப்புறம் ... குருடர் ... வழிகாட்டிகள் ...*

அதாவது, மாய்மாலமான பரிசுத்தம்

கடவுள் நம்மைக் குறித்துத் தெரிந்துள்ளதென்ன என்பதைவிட மனிதர் நம்மைக் குறித்து எண்ணுவதென்ன என்பதே கவலை!

எனவே இயேசு இச்சத்தியத்தை நினைப்பூட்டினார் —

யோ 17:17,18 ... *பரிசுத்தமாக்கும் ... அனுப்புகிறேன்*

☐ ''என்னைப் பாராதே; இயேசுவைப் பார்!'' என்றெல்லாம் சொல்லாதீர்! 1 கொரி 11:1 ... பவுலின் சவால்:

*''நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதுபோல ...''*

☐ வெற்றிகளால் குருடாகிவிடாதீர்.

''கடவுள் என்னில் பிரியமாயிராவிடில்,
என் ஊழியத்தை இப்படி ஆசீர்வதிப்பாரா?''

இது படுமோசமான வஞ்சகங்களில் ஒன்று.

ஊழியங்களைக் கடவுள் ஆசீர்வதிப்பதற்கு முக்கிய காரணம்

— வேலை அதிகம், வேலைக்காரர் குறைவு.

— மக்களின் தேவை கொஞ்சநஞ்சமல்ல.

■ நடைமுறை ஆலோசனைகள் —

☐ அமைதித் தியான வேளையை அசட்டைசெய்யாதிருங்கள்.

☐ அடிக்கடி தற்பரிசோதனை செய்துகொள்ளுங்கள்.

☐ காரியங்களை உடனுக்குடன் சரிசெய்யுங்கள்.

☐ ஆபத்தான துவக்கங்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

☐ உங்கள்மீது கண்டிப்பாயிருங்கள்.

ஓர் எச்சரிப்பு —

உங்கள் வாழ்வைச் சீராக்கிவைத்துக்கொள்ள
நேரமில்லாத அளவு ஓடிக்கொண்டிருந்தால்,
முடிவில் இவ்விதம் புலம்புவீர்கள் —

உன் 1:6ஆ ... *''என்னைத் தோட்டங்களுக்குக் காவலாளியாய் வைத்தார்கள்; என் சொந்தத் தோட்டத்தையோ நான் காக்கவில்லை!''*

(சூலமித்தியின் புலம்பல்)

மாறாக —

ஒரு திருவாக்கு : 2 நாளா 16:9அ

*''உத்தம இருதயத்தாருக்குத் தமது வல்லமை ... கர்த்தரின் கண்கள் ...''*

(பார்க்க: பக்கங்கள் 267-269, 332-334, 778-780)

## 3. குடும்பப் பொறுப்புகளில் தவறக்கூடாது.
Do not fail in family responsibilities.

■ நமது குடும்பத்தினரின் இரட்சிப்பே
நமது முதல் பொறுப்பு —
நமது குடும்பமே நமது முதல் சபையார்!
அப் 16:30,31 ... கேள்வி ''தனிப்பட்ட'' இரட்சிப்புக்கானது;
பதிலோ ''குடும்பத்தை'' உள்ளடக்கியது.

அது வெறும் வார்த்தைகளல்ல;
அவனது முழுக்குடும்பமும் இரட்சிப்பை ''அனுபவித்தது'' —

வச 32 ... குடும்பத்தினர் ''அனைவருக்கும்'' *பிரசங்கம்.*
அப்போஸ்தலரை அச்சிறையதிகாரி உடனே சிறை
யிலிருந்து இல்லத்திற்கு அழைத்துச் சென்றான்!

வச 33 ... குடும்பத்தினர் ''அனைவருக்கும்'' *ஞானஸ்நானம்.*

வச 34 ... குடும்பத்தினர் ''அனைவருக்கும்'' *மகிழ்ச்சி.*

□ எனவேதான், *''உங்கள் பிள்ளைகளுக்காய் அழுங்கள்''* என்றார்
இயேசு (லூக் 23:28)
ஏன்? வச 29 ... இன்னும் கொடிய காலம் வருகிறது.

ஆம், நாம் சந்தித்தவற்றைவிடப் பயங்கரமான சோதனைகளை
நமது பிள்ளைகள் சந்திக்கவிருக்கின்றனர்!

எனவேதான் எலியாவின் மீதிருந்த *ஆவியின் இருமடங்கு*
தனக்கு வேண்டுமென்றான் எலிசா! (2 இரா 2:9)

எலியாவின் ஊழியம் என்ன தெரியுமா?
லூக் 1:17 ... முதலாவது ... *தந்தையர் / பிள்ளைகள்*
... இரண்டாவது ... *கீழ்ப்படியாதோர் / நீதிமான்கள்*
... மூன்றாவது ... *கடவுளுக்காய் ஒரு மக்களினம்*

அதாவது, முதலாவது, குடும்பம்;

அடுத்து, நற்செய்திப்பணி;

மூன்றாவது, சபை

- அப்படியே, பெந்தெகொஸ்தே நாளன்று —
  சூழநின்றோரின் கேள்வி: *''நாங்கள் என்ன செய்யவேண்டும்?''*

  இதற்கான பதில் அவர்கள் குடும்பத்தையும் உள்ளடக்கியது —
  அப் 2:37-39 ... *உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் ...*

- கடவுளை ஆபிரகாமிடம் ஈர்த்தது இதுவே —
  ஆதி 18:17-19 ... *தன் பிள்ளைகளுக்குக் கட்டளையிடுவான்*

- மனைவியின் ஆன்மீகத்திற்குக் கணவன் பொறுப்பு —
  1 பேது 3:7 ... *பலவீன பாத்திரம் ... வாழ்வு தரும் கிருபை*

  எபே 5:25 ... *தன்னலமில்லாது* ...
  :26 ... *கழுவி + தூய்மையாக்கி* — குறைகூறாது ...
  :29 ... *பேணி வளர்த்து* — கட்டியெழுப்பி ...

- அதுபோலவே, கணவனது ஆன்மீக வாழ்வுக்கு மனைவி பொறுப்பு — 1 பேது 3:1,2 ... *மனைவியின் நடக்கையினால்* ...
  மனைவிமாரே! உங்கள் கணவருக்காக ஜெபிக்கும்படி
  ஒரு பிரசங்கி விடாமல் தரிசனங்காணாதீர்!
  **உங்கள்** கடமையை **நீங்கள்** நிறைவேற்றுங்கள்!

- பிள்ளைகளின் இரட்சிப்புக்குப் பெற்றோர் பொறுப்பு
  1 தீமோ 3:4,5 ... *பிள்ளைகளைக் கீழ்ப்படியப்பண்ணி* ...

  இந்த இடத்தை ஊழியம் எடுத்துவிடக்கூடாது!




நீங்கள் தியாகம்பண்ணவே கூடாதவை —
குடும்ப ஜெபம் ... குடும்ப நேரம் ... குடும்பமாய்ப் பயணம்

■ அப்படியானால், நமது பிள்ளைகள் சீர்கெட்டுப் போனால்
நாம் ஊழியமே செய்யமுடியாது என்று பொருளா?

இல்லை! நீங்கள் உங்களால் இயன்றதையெல்லாம் செய்து,
மீதியைக் கடவுள் கரங்களில் விடவேண்டும்!
*''இரட்சிப்பு கர்த்தருடையது''* அல்லவா? (யோனா 2:9இ)

(உ-ம்) தனது பிள்ளைகளைச் சாமுவேல் நன்றாய்த்தான் வளர்த்தான் —
1 சாமு 7:15-17

எப்போதும் தனது வீடு இருந்த ஊருக்குத் திரும்பிவருவான்!
ஆனாலும் அவன் குமாரர் வழிவிலகினர் — 8:1,3

■ இன்னொரு சத்தியம் —
கணவன்-மனைவிக்கு நிகரான திருப்பணிக்குழு எதுவுமில்லை.

எடுத்துக்காட்டு: ஆக்கில்லா-பிரிஸ்கில்லா (அப் 18:2; ரோ 16:3,4)
இத்தம்பதியர் புதிய ஏற்பாட்டில் 6 முறை வருகின்றனர்!

தங்கள் ஊழியங்களில் பயணம் மிகுந்திருந்ததால்
பவுலும் பர்னபாவும் தங்கள் மனைவியரைக் கூட்டிச்செல்லவில்லை
(1 கொரி 9:5,6)

மனைவியரும் பயணித்தால், பிள்ளைகள் என்னாவது?

சாத்தியமான இடங்களுக்கு, வசதியான நேரங்களில்,
முக்கியமாகக் குடும்பங்களுக்குப் பணியாற்றச் செல்கையில்,
உங்கள் வாழ்க்கைத்துணையுடன் செல்லுங்கள் —

ஒரு குடும்பத்திற்குத், தனி நபரைவிட,
இன்னொரு குடும்பம் சிறப்பாய்ப் பணியாற்றலாம்.

ஆபிரகாமைக் கடவுள் ஒரு ''குடும்பமாய்'' அழைத்தார் —
*உலகின் குடும்பங்கள் எல்லாவற்றிற்கும்* அவன் மூலம் இறையாசி!
(ஆதி 12:3)

## 4. தனித்தே செயல்படுபவராய் இருக்கக்கூடாது.
Do not be a loner.

- பாடம் 1இல் சொல்லப்பட்டது —

  தனிப்பட்ட ஈடுபாட்டிற்கு எதையும் பதிலாக்கக்கூடாது.

  இறைப்பணியில் ''தனிப்பட்ட'' ஈடுபாட்டை வலியுறுத்துகையில், அளவுக்குமீறிய ''சுயேச்சையையும்'' நாம் ஊக்குவிப்பதில்லை.

- திருச்சபை ஓர் உடல்.

  எந்த அவயவமும் மற்றவையில்லாது செயல்படமுடியாது —

  எபே 4:16 ... *முழுவுடல் ... தசை நார்கள் ... ஒவ்வோர் உறுப்பு*

  (உ-ம்) சாப்பிடும்போது: கண்கள் உணவைப் பார்க்கின்றன.
  மூக்கு முகர்கிறது.
  விரல்கள் உணவை எடுக்கின்றன.
  வாய் திறக்கிறது.
  பற்கள் மெல்லுகின்றன.
  நாக்கு ருசிக்கிறது.
  தொண்டை விழுங்குகிறது.

  இதுவே ''இசைவான செயல்பாடு'' (Operation in cooperation).

- ஓர் ஊழியனுக்குப் பூரண மாதிரி இயேசுவே.

  அவர் தனித்தே அலையவில்லை.

  அ) உடன் ஊழியரைக் கடைசிக் கட்டத்தில் அல்ல, முதலிலேயே நியமித்துக்கொண்டார் (மத் 4:17-19)

  *''பன்னிருவர் **அவருடன்** இருந்தனர்''* (லூக் 8:1)

  அது ஒரு குழுப்பணி.

  ஆ) தமது சீடரை இரண்டிரண்டு பேராய் அனுப்பினார் (லூக் 10:1)

  இது பிர 4:9-12இன் தத்துவம்.

*“உழைப்பு”* — பரஸ்பர முயற்சி
*“விழுகை”* — பரஸ்பர உதவி
*“போராட்டம்”* — பரஸ்பர ஆதரவு
*“அனல்”* — பரஸ்பர ஊக்குவிப்பு
*“முப்புரிநூல்”* — பரஸ்பர பலம்

திடமானதோர் உடனாளியுடன் சேர்ந்து
வேலை செய்வது அவ்வளவு எளிதல்ல —
ஆனால், நீதி 27:17 ... *இரும்பு இரும்பைக் கூராக்கும்.*
(உ-ம்) பேதுருவும் யோவானும்

பேதுரு: இயேசுவுக்காகவும் குழுவுக்காகவும் பேச விருப்பம்.
யோவான்: இயேசுவோடு மிகநெருக்கமாயிருக்க வாஞ்சை.

உயிர்த்தெழுதலுக்குப் பின்னரும் போட்டிதான் (யோ 21:20-24)

ஆனால் தூயாவியானவர் அவர்களை உருக்கி ஒன்றாக்கினார்:
அப் 3:1 ... *பேதுருவும் யோவானும் சேர்ந்து* ...

அப்போஸ்தலர் நெடுகவே இப்பாணியிலேயே செயல்பட்டனர் —
(உ-ம்) கருத்து வேறுபாடு வந்து பிரிவினைக்குப் பின்னரும்,
பவுல் ஓர் உடன் ஊழியனைச் சேர்த்துக்கொண்டான் ...

அப் 15:39,40 ... *பவுல் “தெரிந்துகொண்டு”* ... உளமார்ந்த செயல்

நிருபங்களை எழுதும்போதும் பவுலுக்கு உடனாளிகள் —

1 கொரி 1:1 ... பவுலும் சொஸ்தெனெயும்
2 கொரி 1:1 ... பவுலும் தீமோத்தேயுவும்
கலா 1:1,2 ... பவுலும் சகோதரரும்
பிலி 1:1 ... பவுலும் கண்காணிகளும் உதவிக்காரரும்
கொலோ 1:1 ... பவுலும் தீமோத்தேயுவும்
1 தெச 1:1 ... பவுலும் சில்வானும் தீமோத்தேயுவும்
2 தெச 1:1 ... பவுலும் சில்வானும் தீமோத்தேயுவும்
பிலே 1,2 ... பவுலும் தீமோத்தேயுவும்

பவுலுக்குத் தீமோத்தேயு எவ்வளவோ இளையவனாயிருந்தும் அடிக்கடி அவனோடு சேர்ந்து எழுதியது —

*''தகப்பனுக்குப் பிள்ளை''* (பிலி 2:22)

- நற்செய்திப்பணியில் மட்டுமல்ல, திருச்சபை ஊழியத்திலும் —

தலைமையில் **பன்மைத்துவம்:**

*மூப்பர் = மேய்ப்பர் = கண்காணிகள்*

*(elders = shepherds = pastors = bishops = overseers)*

(உ-ம்) எபேசு சபை (ஒருமை): அப் 20:17 ... *மூப்பர்* (பன்மை)

- குழுப்பணி என்றால் என்ன?

கூடி ஜெபித்தல் (அப் 13:1,2)
கூடித் திட்டமிடுதல்
கூடி உழைத்தல் (வெவ்வேறு வரங்கள், பலங்கள்)
ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றல்
ஒருவருக்கொருவர் கணக்கொப்புவித்தல்
ஒருவருக்கொருவர் வாய்ப்பளித்தல்

(உ-ம்) இரட்சண்ய சேனை நிறுவனர் வில்லியம் பூத் (1829-1912) பிரசங்கிக்க வேண்டிய கூடுகைக்குச் செல்லமுடியாதபோது கூட்ட அமைப்பாளருக்கு அனுப்பிய தந்தி: ''மற்றவர்!''

எனது சாட்சி: ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தை (BYM) நிறுவிய தலைவனாயிருந்தும், 1996இல் இருதய அறுவை சிகிச்சைக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது பிறரிடம் ஒப்படைக்க ஒன்றுமில்லை.

தலைவனாயிருந்த என்னை, இயக்கத்தின் துவக்கமுதலே, ''ஒருங்கிணைப்பாளர்'' (Coordinator) என்றே அழைக்கச்சொன்னேன்.

- இக்கட்டான வேளையில் பிறருதவி நாடுவதில் மெச்சுவதற்கு என்ன இருக்கிறது?

எல்லாம் சுமூகமாயிருக்கும்போதே உங்களுக்கு உடன் ஊழியர் இருக்கட்டும்; இக்கட்டில் அவர்கள் உதவுவர் —

பிர 4:9 ... அமைதிக் காலம் ... *இருவராயிருப்பது ...*
:10 ... நெருக்கடிக் காலம் ... *விழுந்தால் ... தூக்கிவிடுவர்*

அப்படியே, வச 11 — சமூக நாட்கள் ... ''ஐக்கியத்தின் அனல்''
வச 12 — இக்கட்டுக் காலம் ... ''உடன் சேவகர்''

- நாம் தனித்தே செயல்பட விரும்புதற்குப் பல காரணங்கள் உண்டு —

அ) எலியாவுக்கிருந்த மனநிலை —

நம்மைப்போலப் பக்திவைராக்கியம் யாருக்குமில்லை,
நாம் இணையற்றவர்கள்.

1 இரா 19:14 ... *''பக்தி வைராக்கியம் ... நான் மட்டும்''*
:18 ... *7000 பேர்!*

ஆ) பாராட்டைப் பிறருடன் பகிர விருப்பமின்மை —

தனித்தே விளையாடுவோர் எந்தக் குழுவுக்கும் தகுதியற்றவர்.
ஒலிம்பிக்கில் இந்தியாவுக்குப் பதக்கம் கிடைத்தால்,
உயர்த்திக் காட்டப்படுவது **இந்தியக்கொடி**தானே!

யாருக்குப் பாராட்டு என்று கவலைப்படாத தேவ ஊழியன்
சாதிக்கக்கூடியதற்கு அளவேயில்லை!

(பார்க்க: பக்கங்கள் 59-61, 303-306, 350-351, 380-384, 517-519, 642-646)

## 5. மற்ற ஊழியங்களைக் காப்பியடிக்கக்கூடாது.

Do not duplicate other ministries.

■ இன்றைய சோகநிலை :

எத்தனையோ பேர்,
எத்தனையோ காரியங்களைச் செய்யாதுவிட்டு,
எத்தனையோ பேர் செய்ததையே செய்வதில்
எவ்வளவோ நேரத்தை வீணடிக்கின்றனர்!

(உ-ம்) இந்தியா: கிறிஸ்தவர் 4%; கிறிஸ்தவரல்லாதோர் 96%
ஆனால், கிறிஸ்தவப் பணியில் 90 சதவீதம்
4 சதவீத இந்தியரையே குறிவைக்கிறது.

- அறிவிக்கப்பட்டோருக்கே அறிவிக்கிறோம்,
- தேற்றப்பட்டோரையே தேற்றுகிறோம்,
- திருமுழுக்கு பெற்றவருக்கே திருமுழுக்கு கொடுக்கிறோம்,
- சந்திக்கப்பட்டோரையே சந்திக்கிறோம்;
- ஆனால் விடப்பட்டோரையோ விட்டுவிடுகிறோம்.

இவ்விதச் செயல்பாட்டை இயேசு எதிர்த்தார் —

☐ லூக் 4:42,43 ... *மற்ற ஊர்கள்*
☐ யோ 10:16 ... *வேறே ஆடுகள்*

இதே ஆவி பவுலைக் கவ்விப் பிடித்தது —

ரோ 15:20,21 ... *இன்னொருவரது அடித்தளத்தின்மீது கட்டாமல்* ...
:22 ... எத்தனையோ அழைப்புகளுக்கு மறுப்பு
2 கொரி 10:16 ... *பிறரது சாதனைகளில் நான் பெருமையடிக்காமல்*

■ கவர்ச்சிகர ஊழியங்களையே பலரும் நாடுவதால்,
இன்று பொது மருத்துவர்தான் (General Practitioners) அதிகம்!
குறிப்பான துறைகளில் நிபுணர்கள் (Specialists) இல்லை!

(உ-ம்) கலா 2:9 ... பேதுரு & Co ... *யூதருக்கு*
பவுல் & Co ... *புறவினத்தாருக்கு*

பேதுருவால் ''புறவினத்தாருக்குப்'' பிரசங்கிக்க முடியாது என்பது இங்கு பொருளல்ல —

அவன்தான் புறவினத்தாருக்கு முதலில் பிரசங்கித்தவன் (கொர்நேலியு); அவனது பிரதான ஊழியமோ யூதருக்கு.

அப்படியே, எருசலேமிலுள்ள ''யூதருக்குப்'' பவுல் எத்தனையோ முறை பிரசங்கித்தான்; அவனது பெரிய பாரமோ ரோம் நகரைச் சந்திப்பதே (ரோ 1:13-15).

எத்தனை மிஷனரிப் பயணங்கள்!

இன்று, இந்தியாவின் தலைசிறந்த சுவிசேஷகர்களில்
எத்தனை பேர் கிறிஸ்தவரல்லாதோரையும்,
உயர்குல இந்துக்களையும் இலக்காய்க் கொண்டுள்ளனர்?

இந்துவிலிருந்து வந்த பிரசங்கிமார்கூட பெரும்பாலும் கிறிஸ்தவர்களுக்கே பிரசங்கிக்கிறார்கள்.

■ ஒவ்வொருவரும் தன்தன் அழைப்பில் நிற்கவேண்டும் —
1 கொரி 7:20
24ஆம் வசனத்திலும் அதே வார்த்தைகள், வரிகள்!

அழைப்பும் வரமும்: எபே 4:11 ... பிரசங்க ஊழிய வரங்கள்
இவைகளையே இச்சித்து அலையாதீர்!

மற்ற வரங்களும் உண்டே —
1 கொரி 12:28 ... *உதவிகள் ... ஆளுகைகள் ...*
:29 ... *''எல்லாரும் அப்போஸ்தலரா?''*

இங்குள்ள அடுத்தடுத்த கேள்விகள்
பகட்டு வரங்களையடுத்தவையே!

*''உதவிகள்''* இக்கேள்விகளில் இடம்பெறவில்லை, பாருங்கள்!!!

□ 1 கொரி 12:17
*உடல் முழுவதும் கண்ணானால் ... செவி எங்கே?*
*உடல் முழுவதும் காதுகளானால் ... முகர்வு எங்கே?*

■ □ ஒவ்வொரு பிரசங்கியும் பாடவேண்டுமா என்ன?
மக்களது அழுத்தங்களுக்குப் பிரசங்கிமார் இணங்கக்கூடாது.

□ ஒவ்வொருவரும் மிஷனரிகளை அனுப்பவேண்டியதில்லை!
ஏற்கனவே ஊழியரும் ஊதியமும் குறைவான
எத்தனையோ மிஷனரி நிறுவனங்கள் உண்டு —
அவற்றைத் தாங்கும் பணியை மேற்கொண்டாலென்ன?
புதிதாய் எதையாவது செய்யுங்கள் —
(உ-ம்) **M**issionaries **U**pholders **T**rust
மிஷனரிகளின் சந்திக்கப்படாத தேவைகளில்
இவர்கள் கரிசனை கொண்டுள்ளனர்.

■ இதைக் கற்பனை செய்யுங்களேன் —
**நீரகங்களின்** வேலையை இருதயமோ,
**மூளையின்** வேலையை நுரையீரலோ
செய்ய விரும்பினால் என்ன நடக்கும்?

அந்தோ, இன்று நடப்பது இதுதானே? —
(உ-ம்) நிரந்தர வருமானத்தில் கண் வைத்து
எத்தனை சுவிசேஷகர் மேய்ப்பராகிவிட்டனர்!

■ கடினமான பணிகளைத் துணிந்து மேற்கொள்ளுங்கள் —
யோசு 14:10-12 ... யோசுவாவிடம் 85-வயது காலேப்:
*இந்த **மலைநாட்டை** எனக்குத் தாரும்!*

ஆகாய் 1:8 ... மரக்கடைகள் அல்லது இன்னொரு
கட்டிடத்திலிருந்தல்ல, *மலைகளிலிருந்து,*
*மரம் கொண்டுவந்து* ஆலயம் கட்டுங்கள்.

■ வெகுவாய் விடப்பட்ட இவ்வித மக்களை நினையுங்கள் —
- போதை மருந்துக்கு அடிமையானோர்
- எயிட்ஸ் மற்றும் கொல்லி நோயாளிகள்
- ரிக்ஷாக்காரர்கள்
- லாரி ஓட்டுனர்கள்
- விபச்சாரத் தொழிலாளிகள்
- எளியோர், ஒதுக்கப்பட்டோர்

இயேசுவின் ஊழியம்: *தரித்திரருக்குச் சுவிசேஷம்* (மத் 11:5)

அதாவது, உதவியற்றோர், ஒதுக்கப்பட்டோர்,
நாதியற்றோர், நசுக்கப்பட்டோர், தீண்டப்படாதோர்

- காப்பியடித்தல் பிறப்பிப்பது வீண் **போட்டிகளே.**
  நமது எதிரி யாரென்பதை நாம் மறந்துவிட்டால்,
  மற்ற திருப்பணியாளரோடுதான் சண்டை போட்டுக்கொண்டிருப்போம்.

  விளைவு: பொறாமை, கசப்பு, புறங்கூறல், அவதூறு, ...

- எமில் ஜெபசிங் (1941-2013) அவர்களது பாடல்:

*எத்தனை கூட்டங்கள் இங்கே!*
*எத்தனை கொள்கைகள் இங்கே!*
*ஒன்றும் அறியாதோர் அங்கே!*
*கோடிக் கோடியாக உண்டே!*

*யாருமில்லை, இன்று யாருமில்லை;*
*இயேசுவை அறிவிக்க யாருமில்லை!*

(செயல் வீரர் கீதங்கள், 415)

## 6. பிரபலமாகுதலை நாடக்கூடாது.

Do not seek popularity.

- பிரபலத்தை நாடுவது நமது விசுவாசத்திற்கே கேடு —

யோ 5:44 ... பாதுகாப்பற்று, நங்கூரமற்று, இருக்கும் உணர்வே
பிரபலத்தை நாடுகிறது.
*"விசுவாசி"* = கிறிஸ்துவில் பாதுகாப்பு ...
நமது நிலைக்கு அச்சுறுத்தல் இல்லை.

மனிதரது பாராட்டுக்கெல்லாம் எதிராயிருக்கவேண்டுமென்பதல்ல;
தேவனால் வரும் புகழைவிட *மனிதரது புகழ்பாடலை*
நாடியலைவதோ முற்றும் தவறு —

யோ 12:42,43
மனிதன் தருவது "பரிசுகள்!" (awards)
தேவன் தருவது "பிரதிபலன்கள்!" (rewards)

- திருத்தொண்டில் பிரபலம் நாடினால்,
கடவுளுக்குரிய மகிமையைத் திருடுகிறோமென்றே பொருள்!

தீர்க்கதரிசிகள் அநேகர் இருந்திருக்கின்றனர்;
ஆனால், இயேசுவைப் பொருத்தவரை,
திருமுழுக்கினன் யோவானிலும் பெரியவனில்லை (மத் 11:11அ)

இரகசியம்? யோ 3:30,31 ... *அவர் பெருக ... நான் சிறுக ...*
நாம் குறுகாவிடில், கிறிஸ்து பெருக முடியாது!

எனவேதான் இயேசு சொன்னது —
*"யோவான் **எரிந்து** பிரகாசிக்கும் விளக்காயிருந்தான்"*
எரிவதென்றால் மெழுகுவர்த்திபோல் கரைவது (யோ 5:35).

பிரபலம் விரும்பும் எவனும் *"கடவுளுக்குமுன்" பெரியவனாகான்* —
லூக் 1:15அ

- பழைய ஏற்பாட்டில் ஓர் எச்சரிக்கை :

  எரே 45:5அ ... *உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே!*

- பகட்டாகவே எதையும் செய்ய விரும்பும் சோதனைக்கு இடங்கொடாதீர் —

  விண்ணகப் பணி ''மறைந்து'' செய்யப்படுவது —

  ஏசா 6:2 ... *சேராபீன்கள் ... முகத்தை மூடி ... கால்களை மூடி ...*

  யோவேல் 1:13,14;2:17 ... மறைவிடங்களில் கடவுளிடம் கதறுங்கள்.

  ''பக்தி முயற்சிகளை'' மேற்கொள்ளும்போதே எதையும் பகட்டில்லாது செய்யப் பயிலவேண்டும் —

  (உ-ம்) *தானதர்மம் ... ஜெபம் ... உபவாசம்* (மத் 6:1-18)

  இப்பயிற்சி பின்னர் ''ஊழியத்திலும்'' கைகொடுக்கும்.

- நண்பர் தரும் அழுத்தங்களுக்கும் இணங்காதீர் —

  யோ 7:2-10 ... கூடாரப் பண்டிகை

  ... *உம்மை உலகிற்குக் காட்டும் ...*

- தனிநபர்களை மறந்து திரள்களையே தேடியலையாதீர் —

  (உ-ம்) பன்னிருவருடன் இயேசு எவ்வளவு நேரம் செலவிட்டார்!

  அப்படியே, தீமோத்தேயு, தீத்துவுடன் பவுல்.

- ஊழிய அறிக்கைகளை மிகைப்படுத்தாதீர் —

  மிகைப்படுத்துதல் கடவுளுக்கு மகிமையல்ல,

  நம்மைக் குற்றஞ்சாட்டப் பிசாசுக்கு நல்ல வாய்ப்பு —

  மாற் 6:5 ... *''அவர் பெரிய அற்புதங்கள் செய்ய முடியவில்லை''*

  நேர்மையான அறிக்கை!

- எவரும் உங்களைக் கதாநாயக வணக்கம் செய்யவிடாதீர் —

  *''மானிடன் எவனும் தேவனுக்குமுன் பெருமையடிக்காதபடி ...''*

  1 கொரி 1:29,31

  (உ-ம்) லீஸ்திரா நகரில் பவுலும் பர்னபாவும்

  அப் 14 ... *ஓடிவிட்டனர் ...*

ஏற்பாடு செய்து மாலையணிவித்தலும் இந்நாட்களில் உண்டு!

கிறிஸ்துவிடமிருந்து கற்றுக்கொள்வதற்குப் பதிலாக
நடிகர்கள், அரசியல்வாதிகளைக் காப்பியடிக்கிறோம்!

*''நாம் இவ்விதம் கிறிஸ்துவைக் கற்கவில்லையே!''* (எபே 4:20)

திருச்சபையைக் கடவுள் உலகில் வைத்தார்;
பிசாசோ உலகைத் திருச்சபைக்குள் நுழைத்துவிட்டான்!

- இளம் பிரசங்கிமாரே!

மூத்த பிரசங்கிமார் செய்கிறார்கள் என்றே
எதையும் செய்துவிடாதிருங்கள்!

பெரும்பான்மையினர் பொதுவாகவே தவறுதான் ...

பிசாசின் பெரும்பான்மையினர் vs. கடவுளின் சிறுபான்மையினர்
Devil's majority vs. God's minority

*''விசாலமான பாதை''* vs. *''இடுக்கமான வாசல்''*

- ஓர் எச்சரிப்பு:

எதிலும் முன்னணியிலேயே இருக்க முயலாதீர் —
*முந்தினோர் பிந்தினோராயிருப்பர்!* (மத் 19:30)

## 7. அருட்செய்தியைக் கலப்படமாக்கக்கூடாது.

Do not adulterate the message.

■ ஆதிமுதலே பிசாசு முக்கியமாய்க் குறிவைத்துத் தாக்குவது கடவுளது **வார்த்தையையே** —

அவன் ஏவாளைச் சோதித்தது: ஆதி 3:1

*"கடவுள் **சொன்னது** உண்டோ?"*

தமது வார்த்தையைக் குறித்துக் கடவுள் வைராக்கியமுள்ளவர் —

எனவேதான் கூட்டினாலும் குறைத்தாலும் சாபம் —

வெளி 22:18,19

■ மக்களைப் பிரியப்படுத்த செய்தியைச் சாரமற்றதாக்காதீர் —

கலா 1:10,11

பிரசங்கிப்பது "மக்களுக்காக" அல்ல, "மக்களுக்கு!"

பிரசங்கிக்கவேண்டியது மக்கள் **"விரும்புவதை"** அல்ல,

அவர்களுக்குத் **"தேவையானதை"** — 2 தீமோ 4:3,4

*... தங்கள் சொந்த விருப்பத்திற்கேற்றபடி ...*

Preach what people NEED, not what they WANT!

■ பேராணைக்குக் கீழ் செயல்படுகிறோம் என்பதை நினைத்துக்கொள்ளுங்கள் —

2 கொரி 2:17 ... *"தேவ சந்நிதியில் ..."*

நாம் "சொந்தக்காரர்" அல்ல, "உக்கிராணக்காரர்" (பொறுப்பாளர்) —

1 கொரி 4:1,2 ... *உக்கிராணக்காரர் உண்மையுள்ளவர்களாய் ...*

ஒப்புமை: தபால்காரர்!

■ மேற்பூச்சாய் மருத்துவம் செய்வோர் —

எரே 6:13,14 ... *சமாதானம் ... சமாதானம் ...*

இதற்கு முக்கிய காரணம் **பொருளாசையே!**

☐ எரேமியாவின் பாடுகளும் தைரியமும் —

எரே 18:18 ... *அவனுக்கெதிரான ஆலோசனை ... ''தூற்றல்''*

20:2 ... அடி ... காவலறை

அவனாலோ அமைதியாயிருக்க முடியவில்லை —

20:9 ... *எலும்புகளில் ... நெருப்பு ...*

:11 ... *கர்த்தர்* ***பராக்கிரமசாலியாய்***

*என்னோடு இருக்கிறார்!*

கர்த்தரின் சட்டம்: *''ஒரு வார்த்தையையும் குறைக்காதே!''* (எரே 26:2)

☐ அதுபோலவே, திருமுழுக்கினன் யோவான் :

பொதுவிடத்திலும் தனியறையிலும் —

மத் 3:1-12; மாற் 6:18-29

தலை போனாலும் பரவாயில்லை எனத் துணிந்தான்!

☐ அவ்விதமே, அப்போஸ்தலர்:

''இன்ப இயேசு'' என்று மட்டும் பிரசங்கித்திருந்தால்

சிறையோ வதையோ இருந்திருக்காது;

அவர்களோ முழங்கியது —

*''வானத்தின் கீழே வேறே நாமம் இல்லை!''*

அப் 4:12,13

இந்தியாவில், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மட்டும் சொல்லாவிடில் சுவிசேஷம் பிரபலமாகிவிடும்!

அவ்விதப் *பிரசங்கம் வீண்!* (1 கொரி 15:14)

■ எங்கு பார்த்தாலும் ''பயப்படாதே'' எனும் பிரசங்கங்கள்தான் —

விளைவு: கடவுளுக்குக்கூட மக்கள் பயப்படுவதில்லை!

பாவம் செய்யத் தயங்குவதேயில்லை!

தீர்க்கதரிசனம் என்றாலோ — 1 கொரி 14:3

*பக்திவிருத்தி ... புத்தி ... ஆறுதல்*

இன்றோ ''ஆறுதல்'' மட்டுமே கூறப்படுகிறது;

முதல் இரண்டையும் காணோம்!

- எங்கு பார்த்தாலும் ''கவலைப்படாதே'' எனும் பிரசங்கங்கள்தான் —

  விளைவு: காணாத ஆடுகள் குறித்த பாரமும் பறந்தது!
  அழியும் மக்கள் குறித்த கரிசனையும் மறைந்தது!

- மக்கள் ''பரிசுத்தம்'' அல்ல, ''பரவசம்'' அடைவதிலேயே குறி —

  சபையாரிடம் வழக்கமான கேள்வி:
  ''எத்தனை பேர் சந்தோஷமாயிருக்கிறீர்கள்? கை தூக்குங்கள்!''
  திருமறையின் அழைப்போ: *''பரிசுத்த'' கரங்களை உயர்த்துங்கள்!*
  (1 தீமோ 2:8)

- உடலுக்கடுத்த, பொருளாதார ஆசிகளிலேயே நாட்டம் —

  இயேசு வலியுறுத்தியதோ: (ஆன்மீக நன்மைகள்)
  *''முதலாவது இறையரசு ... **நீதி**''* (மத் 6:33)
  *''**நீதி**யின்மேல் பசிதாகம்''* (மத் 5:6)

  இயேசு செய்த அற்புதங்களின் முடிவான நோக்கம் அவர் யாரென்பதை நிரூபிப்பதே — (யோவான் சுவிசேஷம்)

  (உ-ம்) *நானே ஜீவ அப்பம்*— 5000 பேருக்கு அப்பம் (6:1-14,35)
  *நானே உலகிற்கு ஒளி* — குருடனுக்குப் பார்வை (9:1-7)
  *நானே உயிர்த்தெழுதல்* — லாசரு உயிர்ப்பிப்பு (11:25-44)

- செய்தியைச் சாரமற்றதாக்குவதற்கு இன்னொரு காரணம் —

  வாழ்க்கையில் சமரசம் (மத் 5:19) *... கற்பனை மீறி ... போதிக்கிறவன்*

- மக்களைப் பரவசப்படுத்தத் தரிசனங்கள், சொப்பனங்களையே பிரசங்கித்துக் கொண்டிராதீர் —

  எரே 23:28,29 *... கோதுமை ... பதர் ...*
  மக்களின் **பக்திவிருத்திக்காய்** ''வசனத்தைப்'' பிரசங்கியுங்கள்.

- ஜெபத்திற்கும் பிரசங்க ஆயத்தத்திற்கும் நேரம் செலவிடுங்கள் —

  உங்கள் பிரசங்கம் சத்து நிறைந்ததாயிருக்கட்டும்.
  ஆராய்ச்சி நூல்களைப் பயன்படுத்துங்கள் (பக்கம் 125-127).

  பாலிலிருந்து தண்ணீர்ப்பால்; தண்ணீர்ப் பாலிலிருந்து பால்நிறத் தண்ணீர்; இப்படியா? இல்லை, பாலிலிருந்து புலால் உணவு!
  (milk ⏩ watery milk ⏩ milky water!) (எபி 5:12-14)

## 8. எளியவரைக் கண்டும் காணாமலும் இருக்கக்கூடாது.
Do not bypass the poor.

- நற்செய்தியைப் பிரசங்கித்து மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவரவேண்டுமென்ற உற்சாகத்தில், எளியவரை மறந்துவிடக்கூடாது —

  கலா 2:9,10 ... *"தரித்திரரை **நினைத்து**க்கொள்ளுங்கள்"*
  புதிதாய் மிஷனரிப்பணியில் இறங்குவோரிடம்
  மூத்த அப்போஸ்தலர் முக்கியமாய் அழுத்திக் கூறியது!
  பவுலுக்கு *இந்த "ஆர்வம்" ஏற்கனவே இருந்தது!*

- ஆவியின் அபிஷேகத்தின் முதல் நோக்கம் —
  லூக் 4:18...*"தரித்திரர்க்கு"* ... இதை ஆன்மீகப்படுத்திவிடாதீர்!

*"தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது"* (மத் 11:2-5)
இவ்வாசகம் நமது சுவரொட்டிகளில் இல்லையே, ஏன்?

- "வரங்களைப்" பற்றிப் பேசுகையில்,
  அவை எவ்வளவு "பகட்டு" என்பதில்தான் ஆர்வமே தவிர,
  மக்களுக்கு எவ்வளவு "பணியாற்றுகின்றன" என்பதில் அல்ல —

  (உ-ம்) ரோ 12:6-8

  இந்த 7இல் 5 வரங்கள் சேவைக்காகவே —

  *"தொண்டாற்றல்"* = மக்களுக்கு உதவுதல்
  *"புத்தி சொல்லுதல்"* = ஆலோசனை ஊழியம்
  *"கொடுத்தல்"* = பிறருக்காய்ச் செலவிடல்
  *"தலைமை"* = கரிசனை, முன்மாதிரி
  *"இரங்குதல்"* = மனதுருக்கம் (உ-ம்) அன்னை தெரசா

- எங்கும் "ஜெப" ஊழியங்கள் எழும்பிவருகின்றன—
  பிரபல வாசகம்: *"திறப்பில் நிற்பது"*
  இதன் சூழமைவு? எசேக் 22:29,31
  *... எளியவனை ஒடுக்குகின்றனர் ... எனவே*

அதுபோலவே, உபவாச ஜெபம் — பிரபலமான கூடுகைகள்

ஆனால், தேவனுக்குகந்த உபவாசம் எது? ஏசா 58:6,7

*"... பசியுள்ளோரோடு ஆகாரத்தைப் பகிர்ந்து ..."*

- ஏராளம் "அபிஷேகக்" கூட்டங்கள் —
  கொர்நேலியுவின் அனுபவம் அடிக்கடி மேற்கோள்காட்டப்படுகிறது —
  *"பேதுரு பேசிக்கொண்டிருக்கையிலேயே ..."* (அப் 10:44)
  இரகசியம்? *"தானதர்மம்"* (வச 2,4,31,32)

- நமது ஊழியத்தில் இந்தக் குறைபாடு ஏனென்றால்
  நமது **செய்தியிலேயே** குளறுபடி உண்டு —

திருமுழுக்கினன் யோவான் : லூக் 3:10,11

*ஆடை ... ஆகாரம் ... பகிர்ந்திடுங்கள்*

கிறிஸ்தவ வாழ்வில் வளர்ந்தபின் கற்கவேண்டிய பாடமல்ல;
அதின் அரிச்சுவடியே இதுதான்!

— திருமுழுக்குக்கு ஆயத்தமே இதுதான்!

மக்களின் "மார்க்க மரபுரிமைப்" பெருமையைக் கண்டித்தான் —

*"ஆபிரகாமின் பிள்ளைகள்"* (வச 8)

தானதர்மத்தில் தவறியதிலிருந்து சகேயு மனந்திரும்பியபோது —

இயேசு அறிவித்தது :

*"இவனும் ஆபிரகாமுக்குக் குமாரன்!"* (லூக் 19:8,9)

"சொர்க்கமா நரகமா" என்று தானதர்மம் நிர்ணயிக்கிறது (மத் 25:41-45).

செம்மறியாடுகள் வலப்பக்கம், வெள்ளாடுகள் இடப்பக்கம்.
தகுந்ததைச் செய்யாதிருத்தல் > தகாததைச் செய்தல்

- ஒவ்வொரு சபையிலும் எளியவருக்கான திட்டமும் கிரமமுமான
  நிவாரணப்பணி இருக்கவேண்டும் —

அனாதைகள், விதவைகள் என்றதும் அமெரிக்க டாலரும்
ஜெர்மன் டச்மார்க்கும்தான் நினைவுக்கு வருவதேன்?

எளியவர்க்கு உதவமுடியாத அளவு எச்சபையும் ஏழ்மையானதல்ல —
2 கொரி 8:1-4 ... *கொடிய தரித்திரம்... மிகுந்த உதாரத்துவம்*

■ நீங்கள் ஏழைகளுக்கு உதவினாலும், உங்கள் நோக்கம் என்ன?
(உ-ம்) யூதாஸ் ... யோ 12:3-6
உங்கள் டாம்பீக வாழ்க்கையை மூடிமறைக்கவா?
மக்களிடமிருந்து இன்னும் காணிக்கை பறிக்கவா?

2004 சுனாமியைத் தொடர்ந்து பல ஊழியர் கோடீஸ்வரராகிவிட்டனர். இன்னொன்று வராதா எனக் காத்து நிற்கின்றனர்!!!

■ முடிவானதொரு கருத்து:

பரலோகத்தைத் தரித்திரர்கள் நிரப்புவார், துதியுங்கள்!
1 கொரி 1:26-29 ... *பலசாலிகள், பிரபுக்கள் அநேகரில்லை ... பலவீனர், அற்பர்*
*செல்வந்தன் ... ஒட்டகம் ... ஊசி* (மத் 19:24)

■ இச்சத்தியத்தை இன்னும் தெளிவாய் விளங்கிக்கொள்ள *"பிறர்க்குதவுதல்"* என்ற அடுத்த தலைப்பைப் படியுங்கள்
(பக்கம் 569-610)

(பார்க்க: பக்கங்கள் 34-37, 248-250, 423-425, 571-610)

## 9. பணம் பணம் என்று அலையக்கூடாது.

Do not be moneyminded.

- அன்று ''ஊழியத்திற்குப் பணம்'' என்றிருந்தது;
 இன்றோ ''பணத்திற்கு ஊழியம்'' என்றாகிவிட்டது!
 பன்னிருவரைப் பணிக்கு அனுப்புகையிலே இதைக் குறித்து
 ஆண்டவர் முன்னெச்சரித்தார் —
 மத் 10:7,8 ... *இலவசமாய்ப் பெற்றீர் ... இலவசமாய்க் கொடுப்பீர்*
 மார்க்கமானது, குறிப்பாகப் பகட்டு வரங்களுள்ள ஊழியர்
 கைகளில், வணிகமயமாகுமென்று இயேசு அறிந்திருந்தார்!

 (உ-ம்) சிறப்புக் காணிக்கைகளுக்குச் சிறப்பு ஜெபங்கள் —
 மத் 23:14 ...பேராலயக் கட்டிட நிதிக்காய்ப்
 பாவமன்னிப்புச் சீட்டுகளைப் போப் விற்றதுபோல்!
 *''விதவைகள்''* — நாதியற்றோரை அவர்களது இக்கட்டுகளில்
 வசப்படுத்த
 *''இலவசமாய்க் கொடுங்கள் ...* ***ஏனெனில்*** *... வேலையாள்*
 *... கூலிக்கு ...''* (மத் 10:8,10)
 வீண் கவலையின்றி
 *இறையரசையே தேடுங்கள்* ... மத் 6:31-33

- பின்பற்றத் தகுந்த சவால் நிறை எடுத்துக்காட்டுகள் —

 ☐ தீர்க்கன் சாமுவேல்:
 1 சாமு 12:3-5 ... *''தேவனே சாட்சி''*
 ☐ அப்போஸ்தலன் பவுலும் அதேவிதமாய்ச் சாட்சியிடுகிறான் :
 1 தெச 2:5 ... *பொருளாசை இல்லை ... தேவனே சாட்சி ...*
 — நெடுகவே நடந்துகொண்ட விதம்

 எபேசு மூப்பர்களுக்குப் பிரிவுபசார உரை —
 அப் 20:33-35 ... *இச்சிக்கவில்லை ...* ***காண்பித்தேன்***

ஒவ்வொரு ஊழியனும் ஓங்கி முழங்கவேண்டியது —

*''வாங்குவதைவிடக் கொடுப்பதே பேறுடைமை!''*

அப்படிப்பட்டவன்தான் ***நல்ல*** *மேய்ப்பன்* —

யோ 10:11 ... *தனது உயிரைக் கொடுக்கிறான் ...*

(இப்படிப்பட்டவர்தான் நல்ல பாஸ்டர்!)

*''செலவழி ... செலவழிக்கப்படு''* ( 2 கொரி 12:14,15)

— பெத்த மனசு

☐ பேதுரு: *'' வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை!''* (அப் 3:6)

விசுவாசிகள் ஏராளம் பணத்தை

*அப்போஸ்தலர் பாதத்தில் வைத்தாலும்!*

பணம் *''பாதத்தில்''* — ''பாக்கெட்டில்'' அல்ல (அப் 4:37)

■ ஊழியங்களில் பண ஆசை சர்வசாதாரணமாகிவிட்டது —

பிலி 3:17-19 ... ***அநேகர்*** *... வயிறு ...* *இகத்துக்கடுத்தவை*

தீமோத்தேயுவை வித்தியாசமாயிருக்கப் பவுல் சவால்விடுகிறான் —

1 தீமோ 6:9-11 ... ***''நீயோ,*** *தேவ மனிதனே!''*

எத்தனையோ தீங்குகள்: முக்கியமாக மூன்று —

பொன்னாசை — Gold — முதலாவது

பெண்ணாசை — Girls

பதவியாசை — Glory

கிறிஸ்தவமெங்கும் பண ஆசையெனும் வாதை —

எரே 6:13 ... *தீர்க்கர் ... ஆசாரியர் ... சிறியோர் முதல் பெரியோர்*

சின்ன ஊழியர் ... பெரிய ஊழியர்

முக்கியமாக வரவு செலவு கணக்குகளில் —

2 கொரி 8:20,21 ... பொதுப்பணம் ...

*... கடவுளுக்குமுன் மட்டுமல்ல, மனிதருக்கு முன்பும் ...*

■ பொருளாசையுள்ள ஊழியரோடு நெருங்கியிராதீர்.

1 தீமோ 6:5 ... *''இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு''*
அவர்களைக் கெடுப்பதில் நாமும் பொறுப்பாகிறோம்.

■ பணக்காரர் பின்னால் போகாதீர் — (முன் இருக்கைகள், ...)
பணக்காரரிடம் இயேசு கண்டிப்பாகவே இருந்தார்.
(உ-ம்) ஒட்டகம்-ஊசி / பணக்கார முட்டாள்
அநேகர் புண்பட்டனர் (மாற் 10:24,25; லூக் 12:20;16:19-31)

அப்படியே, தீமோத்தேயுவுக்குப் பவுல்:
*''செல்வந்தருக்குக்* ***கட்டளையிடு!''*** (1 தீமோ 6:19)

■ பொருளாதாரச் செழிப்பை வலியுறுத்தும் செய்தியைப் பிரசங்கித்துப் பிரபலமாக விரும்பும் சோதனைக்கு எச்சரிக்கை!—

யோ 6:1-15... *போஷித்தார்... தீர்க்கதரிசி... இராஜா... விலகினார்*
:32-51 ... *ஆன்மீக ஆகாரம்*
மாற் 8:36,37 ... *உலகையே பெற்றும் ... ஆன்மாவை இழந்தால்*

■ ஒவ்வொரு திருப்பணியாளனுக்கும் நல்லதொரு ஜெபம் —

நீதி 30:7-9 (ஆகூரின் வார்த்தைகள்: வச 1)

''கூடுதலாகவும் வேண்டாம், குறைவாகவும் வேண்டாம்!''
இது நமது விசுவாசத்தை உயிருள்ளதாகவும் விசையுள்ளதாகவும் வைத்துக்கொள்ளும்!

''பணத்தேவைக்கான விசுவாசம்'' நமது ஊழியத்தின் பிறபகுதிகளுக்கும் நன்மை பயக்கும்.

(பார்க்க: பக்கங்கள் 52-54, 104-106, 439-440, 676-679, 755-758)

## 10. திருமறையின் கோட்பாடுகளை மீறக்கூடாது.

Do not violate Scriptural principles.

- கடவுள் பணி கடவுள் வழியில் செய்யப்படவேண்டும்;
  கடவுள் வழி கடவுள் வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

  - ☐ திருப்பணிக்கு வார்ப்பு: பரிசுத்த வேதம் (2 தீமோ 3:16,17)
    திருப்பணிக்கு வல்லமை: பரிசுத்த ஆவி (அப் 1:8; சக 4:6)
    (உ-ம்) மனித பலம் VS. தேவ வல்லமை (உபா 11:10-12)

- இத்தத்துவம் திருமறையெங்கும் இழைபோல் ஓடுகிறது —

  - ☐ நோவா ... ஆதி 6:22;7:5 ...*"கட்டளையிட்டபடியெல்லாம் செய்தான்"*
  - ☐ மோசே ... யாத் 39:42,43 ... *"காட்டப்பட்ட மாதிரிப்படி"* (எபி 8:5)
  - ☐ யோசுவாவிடம் தேவன் சொன்னது ... யோசு 1:7,8
    *"இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறபடி ..."*
  - ☐ மலைப் பிரசங்கத்தில் இயேசு ... மத் 7:21-23
    *தீர்க்கதரிசனம் சொல்லுதல் ... பிதாவின் சித்தப்படி* (= தேவ வசனம்)
    *"ஆகையால் நான் சொல்லிய வார்த்தைகள் ..."* வச 24-27
  - ☐ பவுலின் அறிவுரை: 2 தீமோ 2:5 ...*மல்யுத்தம் ... சட்டத்தின்படி...*
  - ☐ பேதுருவின் அறிவுரை: 1 பேது 4:11அ ... *தேவ வாக்கியங்களின்படி*

- எதிர்மறையான சில எடுத்துக்காட்டுகள்:

  - ☐ மோசே ... *அடி* ... *பேசு* ... (எண் 20:10-12)
  - ☐ சவுல் மன்னன் ... *"பலியைவிட* (வசனத்திற்குக்)
    *கீழ்ப்படிதலே மேல்"* (1 சாமு 15:22)
  - ☐ தாவீது ... *உடன்படிக்கை பெட்டி ... வண்டியில்* (2 சாமு 6:3,6,7)
    இது பெலிஸ்தியரது முறை ... (1 சாமு 6:2,7)
    கடவுளது முறையோ: ... *"தோள்களில்"* ... (யாத் 25:14)
  - ☐ ஒவ்வொருவனது வேலைப்பாடும் *நெருப்பினால்*
    *பரிசோதிக்கப்படும்.* நெருப்பு = திருவசனம் (1 கொரி 3:10-15)

- விவிலியத்திலிருந்து கற்றறியுங்கள்:
  - ☐ ஒரு நபரைக் கிறிஸ்துவிடம் நடத்துவதெப்படி?
    (சமாரியப் பெண், நிக்கொதேமு, ...)
  - ☐ சுவிசேஷம் என்றால் என்ன? (1 கொரி 15:1-5)
  - ☐ ஆவியின் அபிஷேகத்திற்குள் மக்களை நடத்துவதெப்படி?
    நடபடிகளிலிருந்து எடுத்துக்காட்டுகள்
    (8:14-17; 9:12,17,18; 10:44; 19:1-7)

  ஊழியத்தில் செய்யவேண்டியவை, செய்யக்கூடாதவை.

  நமது செயல் முறைகளை அவ்வப்போது திருவசன வெளிச்சத்தில் சரிபார்த்துக்கொள்ளுதல்.

- வழிவிலகலைத் தவிர்க்கத் திருவசனத்தால் நிறைந்திருங்கள் —
  - ☐ திருமுழுக்கினன் யோவான் (லூக் 3:2-6)
  - ☐ இயேசு கிறிஸ்து (லூக் 2:46,47; 24:27,44)
  - ☐ அப்போஸ்தலன் பவுல் (1 கொரி 4:6)
  - ☐ தீமோத்தேயு (2 தீமோ 3:16,17; 1 தீமோ 4:15,16)

- உங்களுக்குப் பயனளிக்கக்கூடிய எனது புத்தகங்கள்:

  *ஊழியரும் மக்களும்* *Preachers & People*
  *ஆனந்த அறுவடை* *Happy Harvest*
  *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?*

  உங்களைத் தெளிவிக்கக்கூடிய எனது ஒளித்தட்டுகள்:

  *தொண்டா தொழிலா?* (English-Tamil)
  *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?* (Eng-Tamil /Hindi)
  *உங்கள் ஊழியத்தை நிறைவேற்றுவது எப்படி?* (English-Tamil)
  *அப்போஸ்தல நற்செய்திப்பணியின் இரகசியங்கள்* (English-Tamil)
  *How to be a Good Pastor* (English-Telugu)
  *Fruitful Ministry* (English-Telugu)